

ஒரிஸ்ஸாவின் நீண்டோடும் பார்கவி நதியின் தெற்குக் கரையோரம் தென்னை மரங்களுக்கு மத்தியில் ஒரு கவிதை மாதிரி இருக்கிறது ரகுராஜ்பூர். மொத்த கிராமத்திலும் ஓவியக் கலைஞர்கள் குடும்பம் குடும்பமாகச் சித்திரம் தீட்டுகிறார்கள். கலை, இலக்கிய விமரிசகர் இந்திரன், இந்த ஓவிய கிராமத்தையும், ஓவியங்களையும் ஆய்வு செய்து வந்திருக்கிறார்.




"ஒரிஸ்ஸா சாகித்ய அகாடமியின் அழைப்பின் பேரில் கருத்தரங்கம் ஒன்றுக்காகப் போயிருந்தேன். நான் புவனேஸ்வருக்கு (ஒரிஸ்ஸா) போகும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அந்தக் கிராமத்துக்குப் போவேன். இம்முறை சாகித்ய அகாடமியின் உதவியுடன் அந்தக் கிராமத்தில் கொஞ்ச


சிறப்பாம்!

"இந்தக் கிராமத்துக்குப் பக்கத்தில் இருக்கும் பூரி ஜெகந்நாதர் ஆலயத்தைப் பற்றிய வரைபடம் தீட்டுவதுதான் இவர்களது முன்னோர்களின் பணி.

'கைடு' இல்லாத அந்தக் காலத்தில் ஆலயம் பற்றி இவர்கள் வரைந்த 'ஜாத்ரிபட்டி' (யாத்ரீகர்களின் படம்) தான் கோயிலுக்கு வரும் பக்தர்களுக் குத் தகவல் களஞ்சியமாக உதவி



திண்ணையில்..



யிருக்கிறது. இவர்கள் வரையும் ஓவியங் களின் பாரம்பரிய தன்மை இன்றைய நவீன ஓவியங்களுக்கு முன்னோடியாக இருக்கிறது'' என் கிறார் இந்திரன்.

தூரிகை, கேன்வாஸ், வண்ணம் என்று ஓவியத்துக்குத் தேவையான எல்லா மூலப் பொருட்களையும் தாங்களே தயாரித்துக் கொள்கின்றனர். வண்ணங்களை ஒரு விதச் சரளைக் கற்களிலிருந்து தயாரிக்கிற இவர்கள், கறுப்பு வண்ணத்தை மண்ணெண்ணெய் விளக்கின் அகலிலிருந்து எடுக்கின்றனர்.

"ஓவியத்தோடு மட்டுமல்லாமல் நடனத்திலும் சிறந்த கலைஞர்களாக உள்ளனர். கோட்டிபுவா என்கிற பாரம்பரிய நடனத்தை இந்தக் கிராமத்துச் சிறுவர்கள் பெண் வேடமிட்டு ஆடுகின்றனர். இந்தச் சிறுவர்களின் குரல் உடையும்போது (வயதுக்கு வந்துவிட்டால்) அடுத்த சிறுவனுக்கு 'கோட்டிபுவா' நடனமாட வழிவிட்டு வாழ்த்துகிறார்கள் இந்த நடனக் கலைஞர்கள். சிறுவனாக இருக்கும் வரைதான் இதை ஆட வேண்டுமாம்'' என்கிற இந்திரன், நதிக்கரையோரம் குடும்பம் குடும்பமாக வாழ்ந்துவரும் இந்தக் கலைக் கிராமத்தை வைத்து ஆங்கில நூலொன்றை எழுதப் போகிறார்.

"ஒரிஸ்ஸாவின் வறுமை ரகுராஜ்பூரையும் விட்டு வைக்கவில்லை. பல நேரங்களில் கால் வயிற்றுக்குக்கூட உணவு கிடைப்பதில்லை. வறுமை வாழ்க்கையைத் தின்றுவிட்டாலும் ஓவியத்தை ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர்களது வீட்டுச் சுவர்களிலெல்லாம் வளமையான ஓவியங் களைத் தீட்டி வைத்திருக் கிற அந்தச் சித்திரக்காரர்களின் கிராமத்து வாழ்க்கை அவ்வளவு வசதியாக இல்லை'' என்கிறார் இந்திரன் வருத்தத்துடன்.


– டி. அருள்எழிலன்



# திண்ணை ஓவியர்கள்!



இந்திரன்



நாள் தங்கியிருந்து முதல் கட்ட ஆய்வை முடித்து வந்துள்ளேன்'' என்கிறார் இந்திரன்.

"இந்தியாவிலேயே இருக்கும் அபூர்வக் கிராமங்களில் அதுவும் ஒன்று. உச்சியில் நேர் வகிடு எடுத்த மாதிரி நீள தெருவில், உயரமான திண்ணைகள். அந்தத் திண்ணைகளில் விடிந்தும், விடியாததுமாக, தூரிகையோடு குழந்தைகளும், பெண்களும், ஆண்களுமாய் ஓவியம் தீட்ட உட்கார்ந்து விடுகிறார்கள். வேறு வேலைகள் எதற்கும் போகாமல் ஓவியக் கலைக்காகத் தங்கள் பாரம்பரியத்தை அர்ப்பணம் செய்திருக்கும் அந்தச் சித்திரக்காரர்களைப் பார்த்து அதிசயித்துப் போனேன்'' என்கிறார் இந்திரன்.



ரகுராஜ்பூர் கிராமத்தில் வாழும் இந்த ஓவியக் குடும்பங்களின் சாதிப் பெயரும் சித்திரக்காரர்கள்தானாம். தலித்துகளோடு இணைந்து வாழும் இவர்களுக்குள் சாதி வேறுபாடு இல்லாமல் அனைவருமே ஓவியர்களாக இருப்பது இன்னும்